
# உத்தமத் தூதர்



இஸ்லாமிக் புக் டிரஸ்ட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தமத் தூதர்

FAMYS
27/1, Fairfield Gardens
Borella, Colombo 8.

சட்டத்தரணி, அல்ஹாஜ்
எஸ். எம். ஹனிபா B.A. (Cey.)

நாலாம் பதிப்பு

இஸ்லாமிக் புக் டிரஸ்ட்
(மாளிகாவத்தை வை. எம். எம். ஏ.
தேசியக் கவுன்சில் கட்டடம்)
323, ஜும்ஆ மஸ்ஜித் வீதி,
கொழும்பு - 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Uththama Thoozar*

By
ALHAJ **S. M. HANIFFA** B. A. (Ceylon)
Attorney-at-Law

With a foreword by the Late
Alhaj Moulavi Fadhil **U. M. THASEEN,**
Bahji, Nadwi (Lucknow) M. A. (Al-Azhar)
Rector, Jaamia Naleemia Islaamia, Beruwela

Publishers :
**ISLAMIC BOOK TRUST,**
(National Council of YMMAs Building)
323, Jumma Masjid Road,
Colombo 10.

All Rights Reserved



| | | |
|---|---|---|
| First edition | Colombo | 1976 |
| Second edition | Kayalpatnam | 1977 |
| Sinhala translation | | 1980 |
| Third edition | Madras | 1982 |
| Fourth edition | Colombo | 1984 |

*PRINTED AT*
**AL-JAZIRA LIMITED, ( PRINTING DIVISION )**
90, Justice Akbar Mawatha, Colombo - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாமியா நளீமியா அதிபராயிருந்த
அல்ஹாஜ் மௌலவி பாஸில், மர்ஹூம்
யூ. எம். தாஸீன்,
பஹ்ஜி, நத்வி (லக்னோ) எம். ஏ., (அல்அஸ்ஹர்)
அவர்கள் வழங்கிய

# முகவுரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனும் ஆகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

இலக்கியத் துறையில் ஒரு முஸ்லிம் ஆற்றும் உயர்ந்த பணி, அறிவுக்குச் செய்யும் பணியாகவே கருதப்படுகிறது. அறிவுப் பணியைப்பற்றி அல்லாஹ்வின் வேதமும், நபி பெருமான் (ஸல்) அவர்களின் போதனைகளும் பரக்கப் பேசியுள்ளன. இத்துறையிலே அருள்மறையாம் அல்குர்ஆனுக்குப் பிறகு, நாம் ஆற்றும் உயர்ந்த பணி நபி பெருமான் (ஸல்) அவர்களைப் பற்றியதேயாகும். நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எல்லோரும் புரிந்து கொள்வது முக்கிய கடமையாகும். அதனுடைய வெளிச்சத்தில்தான் இஸ்லாத்தின் உயர்வை நாம் உணர முடிகிறது.

தமிழ் மொழியில் நபி (ஸல்) அவர்களைப் பற்றிய மிகச் சரியான நூல்கள் வெளிவரவில்லை என்றே கூறுதல் வேண்டும். அதிலும் அவர்களைப் பற்றி சிறுவர்களுக்கான நூல் எதுவுமே முழுமையாக இன்னும் வெளியிடப்படவில்லை. எனது ஆத்ம நண்பர் அல்ஹாஜ் எஸ். எம். ஹனீபா, பி. ஏ., அவர்களின் ''உலகம் புகழும் உத்தமத்தூதர்'' என்ற நூல் இத்துறையில் சிறப்பானதாக அமைந்துள்ளது. இலக்கியத் துறையில், குழந்தை இலக்கியம் படைத்தல் பெரும் சிக்கலான பணியாகக் கருதப்படுகிறது. இந்த ரீதியில் இலக்கிய ஆக்கங்களுக்கே சிறப்பான கருத்தமைவு, எளிய நடை என்பனவற்றை கையாண்டு, சிறுவர்களுக்கென இனிய தமிழில், நபி பெருமானின் வாழ்வைப் படைப்பதில் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் வெற்றி கண்டுள்ளார். எமது நாட்டில் இலைமறை காய்களாக இருக்கும் இஸ்லாமிய கல்விமான்களில், இந் நூலாசிரியரும் ஒருவர். மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கல்ஹின்னை என்னும் கிராமம் ஈன்றெடுத்த எழுத்தாளர்களுள் மிக முக்கியமானவர். சுமார் இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பே ''சமுதாயம்'' எனும் சஞ்சிகையின் மூலம் நன்கு அறிமுகமான ஆசிரியர், திடீரென ஒதுங்கிவிட்டதைக் கண்ட போது, வருந்தியவர்களில் நானும் ஒருவன். ஆயினும் நண்பர் மீண்டும் எழுத்துலகில் காலடியெடுத்து, நபி பெருமானை முதலாவது வைத்து, குழந்தைகளுடன் தனது பணியினை ஆரம்பித்திருப்பது போற்றுதற்குரியது. அவர், தமது முதல் நூலாக நபி பெருமானை சிறுவர்களுக்கு அறிமுகப் படுத்தும் பாணி, மேலும் பாராட்டுதற்குரியது. எம்மத்தியில், இலங்கையிலும் குழந்தையிலக்கியம் படைக்கக்கூடிய உயர்ந்த எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

நபி பெருமானின் வாழ்க்கைப் போக்கினை ஆரம்பம் முதல் இறுதி வரை அழகுறச் சித்திரிப்பதில் நூலாசிரியர் தமது முழுத் திறமைகளையும் கையாண்டுள்ளார். அத்தோடு இணைத்திருக்கும் இஸ்லாமிய ஒழுக்கங்கள் பற்றிய விளக்கங்கள், சிறுர்களுக்கென அருமையாக அமைந்திருக்கின்றன. ''போதனைகள்'' ''நற்குணம்'' ''நல்ல பழக்கங்கள்'' என்ற தலைப்புகளில், இஸ்லாமிய சிறுர்களுக்கான முக்கிய விடயங்களை அழகாகத் தந்துள்ளார் நூலாசிரியர்.

ஆசிரியராக இருந்து, முன்னணி நாளேடான "தினகரன்'' உதவி ஆசிரியராக மாறி, தற்போது இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்தில் பிரதம ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் வழக்கறிஞரான கல்ஹின்னை தந்த அறிஞர், பாராட்டத்தக்கதோர் படைப்பை இஸ்லாமிய சிறுர்களுக்கு அளித்துள்ளார். இந்நூல் ஒவ்வொரு இஸ்லாமிய இல்லத்தையும் அலங்கரிக்க வேண்டியது. ஏன்? தமிழ் தெரிந்த முஸ்லிம் அல்லாத சிறுர்களுக்கும், இந்நூல் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இது, ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு பரவலாக்கப்பட்டால், இதன் பயன் மேலும் விரிவாகும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நண்பரான நூலாசிரியர் அவர்கள் இம்மாதிரியான இஸ்லாமிய இலக்கியப் படைப்புக்களை மேலும் ஆக்கித்தந்து, முஸ்லிம் சமுதாயத்திற்கு உதவுவார் என நம்புகின்றோம். இப்படியான படைப்புகளுக்கு முஸ்லிம்கள், சகல விதத்திலும் துணை புரிந்து, தங்களது இஸ்லாமிய உணர்வையும் இலக்கிய ஆர்வத்தையும் மேலும் வளர்த்துக்கொள்ளுதல் அவசிய மாகும். உயிரோட்டமுள்ள சமூகத்தின் உத்தம பணிகளில் இதுவும் ஒன்று. இறுதியாக, நூலாசிரியரின் முயற்சிக்கு எமது நல்லாசிகள்.

எல்லாம் வல்ல இறைவன் அவரின் இப்பணியை அங்கீ கரிப்பானாக! மேலும் நம்மனைவருக்கும் நல்லருள் பாலிப்பானாக! ஆமீன்.

வேருவலை.
22—2—1976

இஸ்லாத்தின் ஊழியன்,
யூ. எம். தாஸீன்

---

# மூன்றும் பதிப்பு முன்னுரை

அல்லாஹ்வின் நல்லருளால், "உத்தமத் தூதர்" மூன்றும் பதிப்பு சென்னையில் வெளிவருகிறது. "உங்கள் புத்தகம் கிடைக்கவில்லையே!" என்று என்னிடமே நேரில் பல பெற்றோர்கள் குறை கூறியுள்ளார்கள். ஐந்து வருடங்களுக்கு முன்னர் வந்திருக்க வேண்டிய மூன்றும் பதிப்பு, இரண்டாம் பதிப்பு காயல் பட்டணத்தில் வெளியாகிய ஆறு வருடங்களின் பின், தமிழ்நாட்டுத் தலைநகரில் பிரசுரமாவது பற்றிப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இதனால் இஸ்லாமியச் சிறுவர், சிறுமியர் பெரிதும் பயனடைவர் என்பதில் சந்தேகமில்லை. உர்து, மலையாளம் போன்ற பல்வேறு மொழிகளிலும் இந்நூல் வெளிவருதல் மிகப் பயனுடையதாயிருக்கும்.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்ற பழ மொழிக்கிணங்க, சிறுவயதில் தெரிந்து கொள்ளும் தகவல்கள் மனதில் நன்றாகப் பதிந்துவிடுவதுண்டு. ஆதலால், சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதிலேயே இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் நல்ல பழக்கங்களைப் பற்றியும் பிள்ளைகள் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

சிறந்த முகவுரை எழுதி உதவிய அல் ஹாஜ் யூ. எம். தாஸீன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்ஹம்துலில்லாஹ்.

*15—12—1982* —செ. மு. ஹனிபா

---

# இது, நாலாம் பதிப்பு

தமிழ் நாட்டில் இரண்டு பதிப்புக்கள் வெளிவந்துள்ள ''உத்தமத் தூதர்'' நாலாம் பதிப்பை, நம் நாட்டில் இஸ்லாமிக் புக் டிரஸ்ட் முதல் வெளியீடாகப் பிரசுரிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். 1976ம் ஆண்டில், இதன் முதற் பதிப்பு வெளியானது. எட்டாண்டுகளில் நாலு பதிப்புக்களைக் கண்டுவிட்ட இந் நூல்தான், இதுகாலவரை தமிழில் எழுதப்பட்டுள்ள சிறுவர்க்கான நபிகள் நாயக வரலாறு கூறுகின்ற ஒரே நூலாகும். சிங்களத்தில் இதன் மொழி பெயர்ப்புப் பிரசுரமாகியும் நாலாண்டு கழிந்துவிட்டது. அதன் இரண்டாம் பதிப்பும் விரைவில் வெளிவரவேண்டும். சிங்களத்திலும் இது தவிர, இத்தகையதொரு நூல் இது வரை வெளிவந்ததில்லை. எனவேதான், இஸ்லாமிக் புக் டிரஸ்ட்டின் முதல் வெளியீடாக ''உத்தமத் தூதர்'' பிரசுரமாவதில் நாம் அக மகிழ்ச்சி கொள்கிறோம்.

'மானா' எம். எம். மக்கீன்
நிர்வாகப் பங்காளர்,
இஸ்லாமிக் புக் டிரஸ்ட்.

*323*, ஜும்ஆ மஸ்ஜித் ரோட்,
கொழும்பு-*10.—12 3-'84*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறபு நாடு

1

அறபு நாடு, ஆசியாக் கண்டத்தின் தென்மேற்கில் இருக்கிறது. இது மிகப் பெரியதொரு தேசம். இந்த நாட்டில் வாழ்பவர்கள் எல்லோரும் முஸ்லிம்கள். எண்பத்து ஐந்து லட்சம் மக்கள் இங்கு வாழுகின்றனர்.

இந்த நாட்டில் அதிகமாக மழை பெய்வதில்லை. என்ருவது ஒரு நாளைக்கு மழை பெய்தாலும் மிக வேகமான மழையாகத் தொடர்ந்து பல மணி நேரங்களுக்கு பெய்து விட்டு, நின்றுவிடும். இது, பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கின்ற சம்பவம். மழை அதிகமாக இல்லாதபடியாலும், மணல் போன்ற பூமியாய் இருப்பதாலும் அங்கு பயிர்கள் வளர்வதில்லை. ஒரு சில பகுதிகளில் மாத்திரமே, சில பயிர் வகைகள் வளர்கின்றன. ஏனைய பகுதிகள் பாலைவனமாகவே காணப்படுகின்றன.

அறபு நாட்டில் சில நகரங்கள் இருக்கின்றன. மக்கா, மதீனு என்பன இரு முக்கியமான நகரங்கள். அறபு நாட்டின் தலைநகரம் ரியாத் என்று அழைக்கப்படுகிறது. பிரதான துறைமுகம், ஜித்தா நகரில் இருக்கிறது. தஹ்ரான் என்னும் இடத்தில், அமெரிக்கர் அமைத்த விமான நிலையம் இருக்கிறது.

பெருமளவு வருமானம் கிடைக்கின்ற எண்ணெய் வகைகள், அறபு நாட்டில் பெறப்படுகின்றன. இவற்றை ஏற்றுமதி செய்வதனுல், அந்த நாடு நல்ல வருமானம் பெறுகிறது. அதிகமாக அமெரிக்காவுக்குத்தான் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவூதியர் என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு அரசு நடத்துவதனுல் அந்த நாடு சவூதி அறேபியா என்று அழைக்கப்படுகிறது. இப்னு சூஊத் எனும் அப்துல் அஸீஸ் முதலில் ஆட்சி நடத்தினுர். பின்னர் அவரின் மூத்த மகன் சூஊத், அதன் பின்பு பைஸல், பின்னர் காலித் ஆகியோர் ஆட்சி நடத்தினர். அவரின் சகோதரரான மன்னர் ஃபஹ்த் தற்பொழுது ஆட்சி நடத்துகிறுர். இவர்களின் தகப்பனுர் இப்னு சூஊத் (அப்துல் அஸீஸ்) மன்னர் ஆட்சியை சிறந்த முறையில் அமைத்திருந்தார். அறபு நாட்டில் மன்னர்தான் அதிகாரம் செலுத்துகிறுர். அவருக்கு ஆலோசனை கூறுவதற்காக, மன்னர் ஆலோசனைச் சபை ஒன்றை நியமித்திருக்கிறுர். நாட்டின் நன்மைக்கான சட்டங்களைப்பற்றி இந்தச் சபை, மன்னருக்கு ஆலோசனை கூறுகிறது.

அறபு நாட்டில் அதிகமான ஒட்டகைகள் இருக்கின்றன. ஒட்டகையின் மேலே ஏறி அறேபியர்கள் பிரயாணம் செய்கின்றனர். ஒட்டகையிடமிருந்து பாலும் பெறுகின்றனர். அங்கு குதிரைகளும் இருக்கின்றன. அறேபியக் குதிரைகளை ஏனைய நாட்டவர் அதிக விலைகொடுத்து வாங்குகின்றனர்.

அறபு நாட்டின் மேற்கே செங்கடல் இருக்கிறது. செங்கடலின் வடக்கில்தான் சுயஸ் கால்வாய் அமைந்திருக்கிறது. சுமார் எட்டு லட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள அறபு நாட்டின் மேற்குப் பகுதியில் செழிப்பான பூமி இருக்கிறது. இப்பகுதி ஹிஜாஸ் என்று அழைக்கப்படுகிறது. இங்குதான் புனித நகரங்களான மக்கா, மதீனு இருக்கின்றன.

—o—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1500 ஆண்டுகளுக்கு முன்.... 2

அறபு நாட்டில் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள் மிகக் கேவலமான வாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்களிடம் குடிகொண்டிருந்த பழக்க வழக்கங்கள் மிக மோசமானவையாயிருந்தன.

நிறைய உணவு உண்டு, மதுபானம் அருந்தி விளையாடிக் கொண்டிருப்பதிலேயே அவர்களின் வாழ் நாள் கழிந்து கொண்டுபோனது. ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ அதைச் செய்தே தீருவார். எந்த விதமான கட்டுப்பாடுமில்லாத மிருகத்தனமான வாழ்க்கையை நடத்தியவர்கள்தான் அந்தக் கால அறேபியர்கள்.

தனது தகப்பன் காலமானபின், அவர் விவாகம் செய்திருந்த பல பெண்களில் ஒருத்தியை, மகன் தனது மனைவியாக்கிக் கொள்வதை மனம் கூசாமல் செய்தார். ஆண் குழந்தை பிறந்து விட்டால், அவர்களுக்கு மன மகிழ்ச்சியாயிருக்கும், பெண் குழந்தை பிறந்தாலோ பெரும் கவலை! இந்த நிலையில் பிறந்த பெண் குழந்தையை உடனே கொன்று விடுவதை அவர்கள் தயங்காமல் செய்தனர். பல பெண் குழந்தைகள் உயிருடன் புதைக்கப்பட்டன.

தன்னைப் படைத்த இறைவன் ஒருவன் இருக்கின்றதைப் பற்றி அக்கால அறேபியர் நினைத்ததேயில்லை. தங்களின் தீய செயல்களை இறைவன் அறிவான், அவற்றிற்காக அவன் தண்டனை கொடுப்பான் என்றெல்லாம் அவர்கள் நினைத்ததேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே இறைவனுக்குப் பதிலாக அவர்கள் பல சிலை களை வைத்து வணங்கினார்கள்.

ஆட்களைக் கொன்று, அந்த சிலைகளுக்கு பலியாகக் கொடுத்தார்கள். இப்படிச் செய்வதனால், தங்கள் தெய்வங்களைத் திருப்திப்படுத்த முடியுமென்று அவர்கள் கருதினார்கள். மிருகங்கள், மரங்கள், கற்பாறைகள் முதலியன தெய்வங்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். சுருங்கச் சொல்வதானால் அறியாமை அரசு நடத்திய காலம் அது. ஆதலால் கொலை, களவு, பொய், கொடுமை ஆகியன மிக மலிந்து காணப்பட்டன.

—o—

## உத்தமர் பிறந்தார் 3

அறபு நாடு இன்று ஒரே மன்னரின் ஆட்சியில் இருக்கிறது. ஆனால் அந்த நாட்களில் அங்கே பல குடும்ப அதிகாரிகள் ஆட்சி நடத்தினர். அங்கே பல குடும்பங்கள் இருந்தன. ஒவ்வொரு குடும்பத்தினரும் நாட்டின் ஒவ்வொரு பகுதியை ஆண்டு வந்தனர். இவர்கள் சமாதானமாக வாழவில்லை. ஒரு கூட்டத்தாருடன் மற்றக் கூட்டத்தார் போர் நடத்துவதில் ஈடுபட்டிருந்தனர். அற்ப குறைகளுக்காகவும் அவர்கள் யுத்தம் புரிந்தனர். பல ஆண்டுகளாக இந்த யுத்தங்கள் தொடர்ந்து நடந்துவந்துள்ளன.

ஹிஜாஸ் என்ற பகுதியில் குறைசியர் குடும்பம் என்று அழைக்கப்பட்டவர்கள், அந்த நாட்களில் வாழ்ந்து வந்தனர். அந்தப் பகுதியில், மக்கா நகரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஃபா என்ற பழங்காலப் பள்ளிவாசல் இருந்தது, பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நபி இப்ருஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் ஒரே இறைவனை வணங்குவதற்காக இந்தப் பள்ளிவாசலைக் கட்டினார்கள். குறைசிக்குடும்பத்தினர் இந்தப் பள்ளிவாசலின் பாதுகாவலர்களாயிருந்ததனால் ஏனைய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களை கௌரவப்படுத்தினார்கள்; அவர்களுக்கு மரியாதை செலுத்தி வந்தார்கள்.

ஒரு சமயம், அப்துல் முத்தலிப் என்பவர் குறைசிக் குடும்பத்தின் தலைவராயிருந்தார். அவருக்கு பல பிள்ளைகள் இருந்தனர். அப்துல்லா என்ற மகனின் மீது அவர் மிக அன்பாயிருந்தார். இவர் வியாபாரம் செய்வதற்காக வெளிநாடுகளுக்கு செல்வதில் ஈடுபட்டிருந்தார். தனது வாலிப வயதில் ஆமினு என்ற பெண்மணியை விவாகம் செய்துகொண்டார்.

வியாபாரத்திற்காக அப்துல்லா வெளியூர் சென்றிருந்தபொழுது (முன்பு யத்ரிப் என்று அழைக்கப்பட்ட) மதீனுவில் காலமானுர்.

அவர் காலமான பின்பு, ஆமினுவுக்கு ஒரு மகன் பிறந்தார். அவருக்கு முஹம்மது என்று பெயர் வைக்கப்பட்டது.

முதல் நான்கு ஆண்டுகளிலும் முஹம்மத், ஹலீமா என்ற பெண்மணியிடம் வாழ்ந்து வந்தார். இந்தப் பெண்மணி ஒரு தாதி. ஹலீமாவின் குடும்பத்தினர் கல்விகற்பதில் எவ்விதமான ஆசையும் இல்லாதவர்கள். அவர்களுக்கு எழுத, வாசிக்கத் தெரியாமல் இருந்தது. அவர்கள் மத்தியில் வாழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையும் அவர்களைப் போலவே எழுத வாசிக்கத் தெரிந்துகொள்ளவில்லை. கல்வியில் அவர் எவ்வித கவனமும் செலுத்தவில்லை. அங்கு அதற்கான சூழ் நிலை இருக்கவுமில்லை.

அவர் ஆறு வயதை அடைந்ததும் தனது தாயாரையும் இழந்தார். எனவே, அவர் தாய் தந்தை இருவரும் இல்லாத அநாதையானார். அதன் பின்பு அவரின் பாட்டனாரான அப்துல் முத்தலிப் தனது பேரப் பிள்ளையை பாதுகாத்தார். சில ஆண் டுகளின் பின்னர், அவரும் காலமானார். பின்பு முஹம்மதின் சிறிய தகப்பனாரான அபூதாலிபிடம், அவர் வளர்ந்து வந்தார்.

தனது பெயரைக்கூட எழுதத் தெரியாத முஹம் மதுதான், பின்பு உலகிலேயே மிகச் சக்தி வாய்ந்த இஸ்லாம் மதத்தைப் பரப்பப்போகிறவர் என்பதை அப்பொழுது ஒருவரும் தெரிந்திருக்கவில்லை. காலத் திற்குக் காலம், பல ஆயிரக்கணக்கான ஆண்டு களாக உலகிற்கு இறைவனால் அனுப்பப்பட்ட தூதர் களில், கடைசித் தூதராகவும் மிகச் சிறந்தவராகவும் முஹம்மத் விளகுங்வாரென்று யாரும் அன்று நினைக்கவில்லை.

—o—

## வாலிபப் பருவம் 4

வாலிப வயதை எட்டிக்கொண்டிருந்த முஹம் மத் ஆடு மேய்க்கும் இடையராக சிலகாலம் இருந் தார். பின்பு, அவர் வியாபாரம் செய்வதற்குத் தொடங்கினார். சிரியா போன்ற வெளிநாடுகளுக்கும் அவர் வர்த்தகத்திற்காக சென்றுவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய பழக்க வழக்கங்கள் மிக எளிய தன்மையனவாய் இருந்ததைக் கண்ட மற்றவர்கள், அவரின் மீது மரியாதை செலுத்தினர்கள். வாலிப காலத்தில் அவர் ஏழைகளைப் போன்றே வாழ்ந்து வந்தார். எப்பொழுதும் உண்மையையே பேசுவார். அவர் நேர்மையாக நடந்து வந்ததனல் எல்லோரும் அவரை நம்பினர்கள். பத்திரமாக வைத்துக் கொள்வதற்கு மற்றவர்கள் தன்னிடம் காசோ, வேறு பொருட்களையோ கொடுத்தால், அவற்றை நல்ல முறையில் பாதுகாத்து வைத்திருந்து விட்டு, திருப்பிக்கேட்டதும் அப்படியே கொடுத்துவிடுவார்.

இதனல் அவருக்கு அல் அமீன் என்ற பெயர் வந்தது. அமீன் என்ருல் நம்பிக்கைக்குரியவர் என்பது பொருள். முஹம்மத் என்பதன் கருத்து புகழுக்குரியவர் என்பதாகும்.

பொய், களவு போன்ற கெட்ட பழக்கங்கள் அவரிடம் இருந்ததேயில்லை. கல்வி அறிவில்லாமல் இருந்தும் நல்ல பழக்கங்களும் புத்திக்கூர்மையும் அவரிடம் இருந்தன. ஒரு சமயம் குறைசிக் குடும்பத்தினர் கஃபா என்ற பள்ளிவாசலைப் புதுப்பித்துக் கட்டிக் கொண்டிருந்தனர். ஹிஜாஸ் பிரதேசத்திலிருந்த எல்லாக் குடும்பத்தினரும் அவர்களுக்கு இந்த வேலையில் உதவி புரிந்தனர். அந்த பள்ளிவாசலில் சுவர்க்கத்திலிருந்து விழுந்த கருங்கல் ஒன்று இருந்தது. ஹஜருல் அஸ்வத் என்று அக்கல்லுக்குப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கல்லை உரிய இடத்தில் வைக்கின்ற கௌரவம் தங்கள் தங்களின் குடும்பத்திற்குக் கிடைக்கவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒவ்வொரு குடும்பத்தினரும் விரும்பினர். அதைப் பற்றித் தீர்மானிப்பதில் அவர்களுக்கிடையில் சண்டை ஏற்படும் போலிருந்தது. அப்பொழுது. முஹம்மத் அங்கு சென்றார். அதுபற்றி அவர்தான் முடிவு செய்ய வேண்டுமென்று எல்லாக் குடும்பத்தினரும் அவரைக் கேட்டுக்கொண்டார்கள்.

அவர், எப்படி முடிவு செய்தார் தெரியுமா? "ஒரு துணியை எடுங்கள். அதன்மேல் கல்லை வைத்து, எல்லோரும் தூக்குங்கள். அந்தக் கௌரவம் எல்லோருக்கும் சேரட்டும்!" இந்த முடிவு எல்லோருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதன்படி, எல்லோரும் கல்லைத் துணியின்மீது வைத்து தூக்கிச் சென்றனர். அதைச் சுவரில் வைக்க வேண்டிய இடத்தில், அவரே எடுத்து வைத்தார். இதனால், எல்லோருக்கும் திருப்தி ஏற்பட்டது. அத்துடன் மாத்திரமல்லாமல், பல குடும்பங்களுக்கிடையில் ஏற்படவிருந்த சண்டையும், தவிர்க்கப்பட்டது. வாலிபர் முஹம்மதின் புத்திக் கூர்மைக்காக, எல்லோரும் அவரைப் பாராட்டினார்கள்.

முஹம்மத் நேர்மையானவர். நல்ல புத்தியுள்ளவர் என்பதைப் பற்றி மக்காவில் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். அந்தப் பேச்சு மக்காவிலிருந்த பணக்காரப் பெண்மணி ஒருவரின் காதை எட்டியது. கதீஜா என்ற அந்தப் பெண்மணி வியாபாரத்திற்காக பல சம்பளக்காரரை, சிரியா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வந்தார். முஹம்மதையும் அப்படி ஒருமுறை சிரியாவுக்கு அனுப்பினார். தனது கடமைகளை மிகத் திறமையாக அவர் செய்து விட்டு வந்தபடியால் கதீஜாவுக்கு அந்த வாலிபரின் மீது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்ல அன்பு ஏற்பட்டது. எனவே, அவர்கள் இரு வரும் விவாகம் செய்து கொண்டனர். முஹம்ம துக்கு மிகப் பிரியமான மகள், பாத்திமா என்ப வரை கதீஜா பெற்ருர்.

—o—

# இறைவனின் தூதர் 5

மக்காவிலிருந்து சற்றுத் தூரத்திலிருக்கின்ற ஹிரு குகைக்கு இளவயதிலிருந்தே முஹம்மத் தியா னத்திற்காக செல்வது வழக்கமாக இருந்தது. அந் தக் குகையில் தனிமையிலிருந்து கொண்டு அவர் இறைவனைப் பற்றியும், இறைவன் படைத்துள்ள உலகத்தைப்பற்றியும், உலகின் அதிசயங்களைப் பற் றியும் சிந்தனை செய்வார். தனது நாற்பதாவது வயதை அவர் அடைந்த பொழுது, ஒருநாள் குகை யில் சிந்தனை செய்து கொண்டிருக்கையில், மலக்கு களில் ஒருவர் அங்கு தோன்றினர்.

"முஹம்மதே வாசியுங்கள்" என்று அந்த மலக்கு சொன்னர்.

"எப்படி நான் வாசிக்கவேண்டும்? என்னதை வாசிக்க வேண்டும்" என்று கேட்டார் முஹம்மத்.

"மிக்க மேலான உமது இறைவனின் திருநாமத்தின் பேரால் வாசிப்பீராக" என்று அந்த மலக்கு மறு படியும் சொன்னர். "அவனே (சகல படைப்புகளை யும்) படைத்தான். மனிதருக்கு முன்பு தெரியாத வற்றை அந்த இறைவனே கற்றுக்கொடுத்தான்.

மலக்கு சொன்னவற்றையே முஹம்மத் திருப் பிச் சொன்னர். முதலில், அந்த மலக்கைக் கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுடன் முஹம்மத் அதிசயமடைந்தார். இந்த ஆச்சரியமான சம்பவத்தைப் பற்றி வீட்டிற்கு விரைந்து சென்று தனது மனைவியிடம் கூறினர். அவர் தனது உறவினர் ஒருவரிடம் முஹம்மதை அழைத்துச் சென்றார். அந்த முதியவரிடம். தான் கண்டதையும் கேட்டதையும் முஹம்மத் சொன்னர். முதியவர் நல்ல அறிவாளி. அவருக்கு பழைய மார்க்கங்களைப் பற்றித் தெரியும்.

"இறைவனின் தூதைக் கொண்டு வருகின்ற ஜிப்ரீல் என்னும் மலக்கின் பேச்சையே நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். இறைவன் உங்களையே தனது தூதராக தெரிந்தெடுத்திருக்கிருன்" என்று அந்த முதியவர் சொன்னதும். கதீஜா உடனே அவ்வளவையும் பூரணமாக நம்பினர். முஹம்மத் எவ்வளவு உண்மையானவர். கடுகும் நேர்மை தவருதவர் என்பதை மிக நன்ருக அறிந்திருந்த படியால்தான் கதீஜா தயக்கமில்லாமல் அவர் கூறியவற்றை நம்பினர்.

முதன் முதலில் இஸ்லாம் மார்க்கத்தில் நம்பிக்கை வைத்தவர், கதீஜா 'என்ற பெண்மணிதான். அதன் பிறகு, அபூ தாலிப் என்பவரின் மகனை அலி என்ற வாலிபர் நம்பிக்கை கொண்டார். இள வயதிலேயே மிகச் சிறந்த பலசாலியாக இவர் விளங்கினர்.

உலகின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மக்கள் தொகையில் ஐந்து பேரில் ஒருவர் நம்பிக்கை வைத்திருக்கின்ற இஸ்லாம் என்னும் சிறந்த மார்க்கம் இவ்வாறுதான் தோன்றியது. இஸ்லாம் மார்க்கத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தில் நம்பிக்கை கொள்பவர் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் அந்த நாட்டின் முஸ்லிம் என்றே அழைக்கப்படுகிறார். இலங்கையில் வாழுகின்ற இஸ்லாம் மார்க்கத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இலங்கை முஸ்லிம்கள். இந்தியாவில் வாழுபவர்கள் இந்திய முஸ்லிம்கள். அறபு நாட்டில் இருப்பவர்கள் அரபிய முஸ்லிம்கள். ஒருவருக்கொருவர் ஒரு போதுமே வேறுபாடுகளை பாராட்டாதவர்களே முஸ்லிம்கள். எந்த நாட்டைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரியே. ஏழையோ பணக்காரனோ எல்லா முஸ்லிம்களும் சகோதரர்கள். ஒருவரோடு ஒருவர் சமமானவர். எவ்வித ஏற்றத் தாழ்விலும் நம்பிக்கை இல்லாதவர்கள்.

இறைவனின் தூதராக வந்து உலகில் வாழுகின்ற மக்களுக்கு நேரான வழியை காட்டிக் கொடுப்பவர்களுக்கு 'நபி' என்று அறபியில் சொல்லப்படுகிறது. எனவே பெருமானார் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்கு தனது நாற்பதாவது வயதில் இறைவனின் தூதர் ஆகின்ற பாக்கியம் கிட்டியது. ரமழான் மாதத்தில் பிந்திய பத்து நாட்களில் வருகின்ற ஓர் இரவில்தான் மக்கா நகருக்கு அருகிலுள்ள ஹிராக் குகையில், முதன் முதலாக ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) என்ற மலக்கு தோன்றினார். மகிமையான அந்த இரவில் தொடங்கியதிலிருந்து பெருமானாரின் எஞ்சிய வாழ்க்கைக் காலமான இருபத்துமூன்று ஆண்டுகளிலும் திருக்குர்ஆன் அருளப் பெற்றது. அந்தக் காலத்தின் நிலைமைக்கும், அவசியத்திற்கும் தக்கபடி கொஞ்சம் கொஞ்சமாக, அத்தனை வருடங்களிலும் அருளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. பெருமானுர் வாழ்ந்த இறுதி ஆண்டிலே பூர்த்தி பெற்றது.

முஸ்லிம்களுக்கு இறைவன் காட்டியுள்ள நேரான முறையில், வாழ்க்கை நடத்துவதற்கு உதவுகின்ற திருக்குர்ஆன், தீமையிலிருந்து விலகி நடப்பதற்கு வழிகாட்டியாய் இருக்கிறது. திருக்குர்ஆனின் எண்பத்தியேழாவது சூருவில் ஏழாவது வாக்கியம் என்ன சொல்கிறது தெரியுமா? "அல்லாஹ் நாடினலன்றி (அதில் யாதொன்றையும்) நீர் மறக்கமாட்டீர்." திருக்குர்ஆன் அருளப்பெற்ற ஆரம்பத்திலேயே, ஜிப்ரீல் (அலை) இப்படி நபி பெருமானுருக்கு அறிவித்து விட்டார். ஆதலால் திருக்குர்ஆன் முழுவதையும் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மறக்காமல் மனப்பாடம் பண்ணி வைத்திருந்தார்கள். அவர்களுடைய நண்பர்களும் குர்ஆனை மனப்பாடம் செய்தார்கள். பின்னர் ஒரு காலத்தில், குர்ஆன் எழுத்து வடிவில் அமைக்கப்படும்பொழுது, இந்த நண்பர்கள் அந்த வேலையில் மிக உதவியாயிருந்தார்கள். அன்று எழுத்தில் எப்படி அமைக்கப்பட்டதோ, அதேபோன்று எந்தவிதமான மாற்றமும் இல்லாமல், இன்றும் குர்ஆன் அதே மாதிரியாக இருக்கிறது. கருத்துக்களிலோ, அன்றி எழுத்துக்களிலோ, எந்த மாற்றமும் ஒரு காலத்திலும் செய்யப்படவில்லை.

—o—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிகளின் தொல்லைகள் 6

மனிதனின் சீரான வாழ்வுக்கு மிகவும் நேரான வழியை காட்டிக்கொண்டிருந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கும் எதிரிகள் சிலர் இருந்தனர். நல்லவருக்கு எதிரிகள் இருத்தல் ஆச்சரியம்தான். ஆனுல், நல்லதை செய்ய விடாமல் எதிர்க்கும் தீய வர்களும் உலகில் இருக்கிருர்கள். ஆதலால் நல்லது செய்பவர்களுக்கு அவர்கள் தீமையே செய்ய முயற்சி எடுப்பார்கள். அதிலும் அந்தக் கால அருபியர் தீமைச் சூழலிலேயே வாழ்ந்தவர்கள். தீய பழக்கங் களை விட்டுவிடும்படி சொன்னவுடனேயே, விடுவார் களா? தங்களை நேர் பாதையில் நடத்த முயன்ற வருக்கு, தீங்கு செய்ய திட்ட மிட்டார்கள். அவர் களைக் கொன்றுவிட வேண்டுமென்று கூட அந்த அருபியர் விரும்பினுர்கள். அவர்கள் தொழுகையை நடத்துவதற்கு விடாமலும் இடையூறு செய்தார்கள். இஸ்லாத்தைப் பின்பற்றியவர்களுக்கும் தீங்குகளே செய்தார்கள். சிலரின் கால் கைகளை கயிற்றினுல் கட்டி வேகும் வெய்யிலில் அப்படியே விட்டு வைப்பார்கள். அப்படி விடப்பட்டவர்களுக்கு, உணவு கொடுப்பதில்லை. குடிப்பதற்கு தண்ணீரும் கொடுக்காமல் விட்டார்கள். இந்த விதமான கொடு மையினுல் பலர் உயிரிழந்தார்கள். ஆனுல், அவர் களுக்கு இஸ்லாத்தில் உறுதியான நம்பிக்கை இருந் தது. தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற் காகவும், அவர்கள் இஸ்லாத்தில் வைத்திருந்த நம் பிக்கையை விட்டுவிடச் சம்மதிக்கவில்லை. ஆரம்ப கால முஸ்லிம்கள், அருபியர்களால் பெரும் துய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு ஆளானார்கள். அவர்கள் படும் துன்பத்தைக் கண்டு பொறுக்க முடியாமல், சிலர் அபிசீனியா என்ற ஆபிரிக்க நாட்டுக்கு செல்வதை நாயகம் (ஸல்) அனுமதித்தார்கள்.

எதிரிகளின் துன்புறுத்தல்களைக் கருத்திற் கொள்ளாமல் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைப் போதனை செய்து கொண்டு வந்தார்கள். முன்னர் அவர்களின்மீது கல்லையும் மண்ணையும் வீசியும் தலைமீது சாம்பலைப்போட்டும் எதிரிகள் நபி (ஸல்) அவர்களைத் துன்புறுத்தினார்கள்.

''பொய்யன், மாயக்காரன். பைத்தியக்காரன்'' என்றெல்லாம் அவர்களை அழைத்தனர். இவற்றினால் பயன் கிடைக்கவில்லை. ஆதலால் அருபியர்களின் தலைவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, நபி (ஸல்) அவர்களிடம் போனார்கள். "உங்களுக்கு பெருந்தொகையான தங்கமும், காணிகளும் தருகிறோம். எங்களின் மன்னராக்கிக் கொள்கிறோம். ஆனால் நீங்கள் ஒரே தெய்வ வணக்கத்தைக் கைவிட வேண்டும்'' என்று கேட்டார்கள். நபி (ஸல்) இதற்கு இணங்கவில்லை. தொடர்ந்தும் அவர்கள் இஸ்லாத்தைப் போதித்து வந்தார்கள். இதனால் எதிரிகள் அதிருப்தியடைந்தனர்.

நபி (ஸல்) அவர்களின் சிறிய தகப்பனார் அபூ தாலிபிடம் அருபியரின் தலைவர்கள் சென்றனர். ''எங்கள் தெய்வங்களுக்கு எதிராக உங்கள் மகன் போதனை செய்து வருகிறார். அவர் தொடர்ந்து அப்படிப் போதனை செய்தால் பெரிய ஆபத்துத்தான் வரும்'' என்று சொன்னார்கள். அருபியரின் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதைக் கேட்டு அச்சமடைந்த அபூ தாலிப் நபி (ஸல்) அவர்களிடம் சென்று "அவர்களின் தெய்வங்களுக்கு எதிராக போதனை செய்ய வேண்டாம். என்னுல் உங்களைக் காப்பாற்ற முடியாது" என்று தெரிவித்தார்கள். எதிரிகளிடமிருந்து தனது மகனை காப்பாற்றுவதற்காகவே அபூ தாலிப் இப்படிச் சொன்னுர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அரூபியத் தலைவர்கள், எனது வலது கையில் சூரியனையும் இடது கையில் சந்திரனையும் வைத்தால்கூட நான் எனது போதனையைக் கைவிடமாட்டேன்" என்று பதிலளித்தார்கள். இப்படியான தைரியமுள்ள பதிலைக்கேட்டு அபூ தாலிப் மனமகிழ்ந்தார். அதனுல் "உங்களின் நல்ல போதனையை தொடர்ந்து செய்து வாருங்கள். உங்களுக்கு யாரும் அபாயம் விளைவிக்க முடியாது" என்று கூறி விட்டுப் போனுர்.

எதிரிகள் இடைவிடாமல் நபி (ஸல்) அவர்களுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டே வந்தார்கள். அவர்களுடன் மற்றவர்கள் எவ்விதமான தொடர்பும் வைத்துக் கொண்டதில்லை. அவர்களை வீட்டிலிருந்து வெளியில் வர விடாமலும் தடுத்து வைத்தார்கள். அவர்களின் போதனையை நிறுத்தும்படி செய்வதற்கு எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியுற்றதனுல், நபி (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு எதிரிகள் திட்டமிட ஆரம்பித்தார்கள். இதே சமயத்தில், நபி (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பாயிருந்த சிறிய தந்தை அபூ தாலிப் காலமானுர். அதன் பின்னர், குறைசிக் குடும்பத்தின் தலைவராக அபூ சுபியான் பொறுப்பேற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்ச்சியின் தோல்வி 7

நபி (ஸல்) அவர்களின் போதனைகளில், அபூ சுபியான் நம்பிக்கை கொள்ளவில்லை. அவர் சிலை களை வணங்கினார். "சிலைகளை வணங்குவதால் எவ் வித பயனுமில்லை. அவற்றுக்கு எந்த சக்தியும் கிடையாது" என்று நபி (ஸல்) அவர்கள் அபூ சுபி யானிடம் கூறினார்கள். அவர் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆதலால் அவருக்கு நபி (ஸல்) அவர்களின் மீது வெறுப்பிருந்தது. இதை அறிந்த எதிரிகள், ஒரு நாள் அபூ சுபியானின் வீட்டில் கூடினார்கள். நபி (ஸல்) அவர்களின் ஒரே தெய்வக் கொள்கையை கைவிடும்படி செய்வதற்காக என்ன உபாயம் செய் யலாம் என்று தீர்மானிப்பதற்கு தான் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

"அவரை சிறைச்சாலையில் பூட்டி வைப்போம். வெளியில் வரவிடாமல் சிறைச்சாலையிலேயே இருந் தால் அங்கு இறந்து விடுவார்" என்று ஒருவர் கூட்டத்தில் ஆலோசனை கூறினார். இதனை வேறொ ருவர் எதிர்த்தார். சிறைச்சாலையில் இருந்து அவர் தப்பித்துவிட்டால் மறுபடியும் எங்களுக்குத் தொல்லை கொடுப்பார்" என்று மற்றையவர் நியா யம் கூறினார்.

"அறபு நாட்டிலிருந்து அவரை வெளியேற்றி விட வேண்டும். இனிமேல் இந்த நாட்டிற்கு அவர் வர அனுமதிக்கப்படலாகாது" என்று வேறொருவர் ஆலோசனை சொன்னார். "அது நல்ல திட்டமல்ல. அவரை அறபு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பினுல் அங்கேயும் போதனை செய்யத் தொடங்கி விடுவார்'' என்று கூறி இந்த ஆலோசனைக்கும் ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்தார்.

''அப்படியானுல் அவரை கொலை செய்து விடுவோம். அவரை வேறு ஒன்றும் செய்ய முடியாது'' என்று மேலும் ஒருவர் ஆலோசனை தெரிவித்தார்.

''அது ஒரு நல்ல திட்டம்தான். ஆனுல் அதைச் செய்வது யார்?'' என்று அபூ சுபியான் கேட்டார்.

எல்லோரும் அமைதியாக இருந்துவிட்டனர். நபி (ஸல்) அவர்கள் குறைசிக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர்களைக் கொலை செய்தால் குறைசிக் குடும்பத்தினர் கோபமடைவார்கள். நபி (ஸல்) அவர்களை கொலை செய்பவரை அந்தக் குடும்பத்தினர் கொலை செய்துவிட முயற்சிப்பார்கள். இதனுல் அறபு நாட்டில் பெரியதோர் யுத்தம் நடைபெறும். இப்படியாக அந்தக் கூட்டம் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தது. கடைசியில், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு ஆள் வீதம் தெரிந்தெடுத்து அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி நபி (ஸல்) அவர்களைத் தாக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. எல்லாக் குடும்பத்தினரும் ஒரே நேரத்தில் தாக்கினுல் எல்லாக் குடும்பங்களும் செய்த குற்றத்திற்கு குறைசிக் குடும்பத்தார் யுத்தம் நடத்தப் போவதில்லை. எல்லோரையும், ஒரு குடும்பத்தார் தனியே எதிர்த்து நிற்க முடியாது. இந்த விதமாக முடிவு செய்தபின், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொரு ஆள் தெரிவு செய்யப்பட்டார். ஒரு இரவு அந்த ஆட்கள் எல்லோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் நபி (ஸல்) அவர்களின் வீட்டு முன்னல் கூடி யிருந்தார்கள். இதைப் பற்றி அறிந்த நபி (ஸல்) அவர்கள் எதிரிகள் காணுமல் வீட்டு வாசலில் இருந் தவர்கள் நித்திரையாயிருக்கும் போது வீட்டிலிருந்து வெளியேறினுர்கள்.

அமைதியாக நபி (ஸல்) வீட்டிலிருந்து சென்ற பின்னர், அபூ தாலிப் மகளுன அலி, நபி பெருமானின் படுக்கையில் நித்திரை செய்தார். நபி (ஸல்) அவர்களுடைய புடவைகளாலேயே நன்ருக போர்த்திக் கொண்டார். இஸ்லாத்தை முதலில் ஏற்றுக்கொண்ட வாலிபரான இவர், துணிச்சல் மிக் கவர். நல்ல தைரியசாலி. நபி பெருமான் மீது அளவிலாத அன்பு கொண்டிருந்தார். அவர், படுக் கையில் இருப்பதை அறியாத எதிரிகள், அறையி னுள் சென்ருர்கள். ஒருவர் படுத்துக்கொண்டிருப் பதைக் கண்டு, முஹம்மத் நபிதான் இருக்கிருர் என நினைத்தார்கள். கைகளில் வாள்களுடன், கட் டிலை நெருங்கினுர்கள். புடவைகளை அகற்றிய பின் னர் ஆச்சரியம் அடைந்தார்கள். முஹம்மத் நபி இருக்க வேண்டிய இடத்தில் அலி இருந்தார்.

என்ன செய்யலாம் என்று தெரியாமல் திகைத்து நின்ற எதிரிகள் அலியை கொல்வதா? விட்டுவிடு வதா என்று தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட் டது. வயதில் மிகக் குறைந்த வாலிபரான அலி, நல்ல மார்க்கப் பற்றுடையவராக இருந்தார். எதி ரிகள் அவர் மீது அன்பு கொண்டிருந்தார்கள். ஆத லால் அவர்கள் அவரை கொலை செய்யாமல் விட்டு விட்டனர்.

—o—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதீனா பயணம் 8

மக்காவிலிருந்து சுமார் இரு நூறு மைல் தூரத்தில் யத்ரிப் என்று முன்னைய காலத்தில் அழைக்கப்பட்ட மதீனா இருந்தது. இந்த நகரம், அவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் பிரயாணக் கஷ்டங்கள் இருந்த அந்த நாட்களில் மதீனாவாசிகள் அடிக்கடி மக்காவுக்குச் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் நபி (ஸல்) அவர்களை சந்தித்தார்கள். அவர்களில் சிலர் முஸ்லிம் ஆனார்கள். இவர்கள் மதீனாவுக்குத் திரும்பிப்போய் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஏனையவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். முஸ்லிம்களின் தொகை அதிகரித்துக் கொண்டிருந்தபோது, மதீனா வாசிகள் நபி (ஸல்) அவர்களை மதீனாவுக்கு அழைத்தார்கள். நபி பெருமான் தங்கள் மத்தியில் வாழ வேண்டும் என்று இவர்கள் விரும்பினர்.

தனது வீட்டு வாசலில் இருந்தவர்கள் நித்திரையாய் இருக்கும் பொழுது வீட்டிலிருந்து வெளியேறிய நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்குப் பயணமானார்கள். அவர்களுடன் துணையாக, அபூபக்கர் (ரலி) அவர்களும் சென்றார்கள். இரவு முழுவதும் நடந்துவிட்டு, அதிகாலையில் இருவரும் தௌர் என்னும் குகையில் தங்கினர். மூன்று நாட்களாக இருவரும் குகையில் இருந்ததைப் பற்றி ஒருவருக்கும் தெரியாது.

மக்காவிலிருந்து நபி (ஸல்) அவர்கள் பயணமாகி விட்டதைப் பற்றி அறிந்த எதிரிகள் "அவரைத் தேடிப் பிடியுங்கள்" என்று அறிவித்தார்கள். "எங்களிடம் அவரைக் கொண்டு வருபவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டகைகள் தந்து செல்வந்தர்கள் ஆக்குவோம்'' என்றும் தெரிவித்தார்கள். மக்காவின் ஏழைகள் வெகுமதியைப் பெறுவதற்காக அவரை எங்கும் தேடித் திரிந்தார்கள். ஆனால் ஒரு இடத்திலும் காண முடியாமல் போயிற்று. ஒரு சமயம் சிலர் தௌர் குகையின் சமீபத்தில் சென்றார்கள். அந்தக் குகையினுள் சென்று பார்ப்பதற்கும் விரும்பினார்கள். ஆனால், குகை வாசலில் சிலந்திக்கூடு ஒன்றும் புரு வின் கூடொன்றும் இருப்பதைக் கண்டார்கள். ஆதலால் குகையினுள்ளே எவரும் இருக்க முடியாது என்று தீர்மானித்துக் கொண்டு அந்த இடத்திலி ருந்து போய் விட்டார்கள். குகைக்கு வெளியில் ஆட்கள் பேசும் சத்தத்தைக் கேட்ட அபூபக்கர் (ரலி) பயமடைந்தார். ''நாம் என்ன செய்யலாம்? இரண்டு பேர்தானே இருக்கிறோம். எதிரிகள் நம்மை கண்டு பிடித்து விடுவார்கள்'' என்று அவர் நபி (ஸல்) அவர்களிடம் சொன்னார். ''இல்லை, நாம் மூன்று பேர் இருக்கிறோம். இறைவனும் நம்முடன் இருக்கிறான்'' என்று நபி பெருமானார் பதில் சொன் னார்கள். அவர்களின் உறுதியான நம்பிக்கை காரண மாக இறைவன் இருவருக்கும் பாதுகாப்புக் கொடுத்தான்.

அதன் பின்னர் இருவரும் குகையிலிருந்து வெளி யேறி மதீனாவுக்குச் சென்றார்கள். மதீனா நகரின் அருகில் நபி (ஸல்) அவர்களுக்கு மிகப்பெரிய வர வேற்பு அளிக்கப்பட்டது. பெருந்தொகையான மக் கள் கூடி நின்று மிக்க மகிழ்ச்சியுடன் அவர்களை வர வேற்றனர். இவர்களில், சிறிய பெண் பிள்ளைகளும் இருந்தனர். அவர்கள் பாட்டுக்களைப் பாடினர். நபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானுரை பாராட்டி பலர் பல பாட்டுக்களே பாடினுர்கள். தங்கள் வீடுகளில் வந்து தங்கும்படி ஒவ்வொருவரும் கேட்டனர்.

"நான் எங்கே தங்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிருனே அந்த வீட்டின் முன்னுல் ஒட்டகை போய் நிற்கும்" என்று நபி (ஸல்) சொன்னுர்கள். அபூ ஐயூப் அவர்களின் வீட்டு முன்னுல் நபி (ஸல்) சவாரி செய்த ஒட்டகை நின்றது. அங்கேயே அவர்கள் தங்கினுர்கள்.

யத்ரிப் என்ற பழைய பெயருக்குப் பதிலாக இந்நகருக்கு மதீனத்துன் நபி என்று மக்கள் பெயரிட்டனர். நபியின் நகரம் என்பது இதன் கருத்து. இப்பொழுது, மதீனு என்று இந்நகரம் அழைக்கப் படுகிறது.

மக்காவிலிருந்து நபி பெருமானுர் மதீனுவுக்கு பயணமானதை ஹிஜ்ரத் அல்லது வெளியேறுதல் என்று கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்திலிருந்து தான் இஸ்லாமிய ஆண்டு கணிக்கப்படுகிறது. இஸ்லாமிய ஆண்டை, ஹிஜ்ரி என்று கூறப்படும்.

கடைசி காலம் வரை நபி (ஸல்) மதீனுவில் தங்கினுர்கள். காலமான பின்னர், மதீனுவில்தான் அடக்கப்பட்டார்கள். இன்றும் அவர்களின் அடக்கஸ்தலம் இருக்கிறது. மஸ்ஜிதுன் நபி என்று அழைக்கப்படுகின்ற நபி பெருமானுரின் பள்ளிவாசலுக்கு அருகில் அவர்கள் அடக்கப்பட்டார்கள்.

—O—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்காவிலிருந்த முஸ்லிம்களில் பலர் மதீனுவில் சென்று நபி (ஸல்) அவர்களுடன் தங்கியிருப்பதற்கு விரும்பினுர்கள். அப்படிச் சென்று வாழ்ந்தவர்களை எல்லாம் கொன்று விடவேண்டும் என்று மக்காவிலிருந்த குறைசியர் முயற்சி எடுத்தார்கள். குறைசியர் கொடுமையானவர்கள். எனவே, அவர்கள் பெரிய படையொன்றைச் சேர்த்துக் கொண்டு மதீனுவில் வாழ்ந்த முஸ்லிம்களுடன் போருக்குச் சென்ருர்கள்.

குறைசியரின் திட்டத்தைப் பற்றி அறிந்த மதீனு வாசிகள், யுத்தத்தில் தமது பெண்களையும் பிள்ளைகளையும் இழந்துவிடக் கூடாது என்று தீர்மானித்தார்கள். எதிரிகளை தாக்குவதற்கு அவர்களும் தயாராஞர்கள். யுத்தம் ஆரம்பமானது. பல வருடங்களாக இரு பகுதியினருக்குமிடையில் போர் நடைபெற்றது. இறுதியில் முஸ்லிம்கள்தான் வெற்றி பெற்ருர்கள். மக்காவையும் முஸ்லிம்கள் கைப்பற்றிஞர்கள். சில வருடங்களில், அறேபியாவிலிருந்த எல்லா மக்களும் இஸ்லாம் மதத்தையே பின்பற்றுவதற்கு வழி ஏற்பட்டது.

### பத்ர் யுத்தம்

முஸ்லிம்களுக்கும் எதிரிகளுக்குமிடையில் நடந்த முதலாவது யுத்தத்தை பத்ருப் போர் என்று அழைக்கப்படுகிறது. மதீனுவிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் இருக்கும் பத்ர் என்ற இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பகுதியினரும் சந்தித்து போரிட்டதனுல் இந்த பெயர் வந்திருக்கிறது. ஹிஜ்ரி இரண்டாம் ஆண் டில் இந்த யுத்தம் நடைபெற்றது. குறைசியரின் பக்கத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட வீரர் குவிந் தார்கள். முஸ்லிம்களில் முன்னூற்றுப் பதின்மூன்று பேர்தான் இருந்தனர். எதிரிகளிடம் இருநூறு குதிரைகள் இருந்தன. ஆனல், முஸ்லிம்களிடம் இரண்டே இரண்டு குதிரைகளும் எழுபது ஒட்ட கைகளும் இருந்தன.

பத்ர் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக நபி (ஸல்) அல்லாஹ்விடம் துஆ கேட்டார்கள். முஸ் லிம்களுக்கு தைரியம் சொல்லி ஊக்கப்படுத்திஞர் கள். அப்படியிருந்தும், முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததனுல், அவர்கள் தோல்விய டைந்து விடுவார்கள் போலிருந்தது. நபி (ஸல்) அல்லாஹ்விடம் வெற்றிக்காக துஆச் செய்தார்கள். தைரியம் வரக்கூடிய வார்த்தைகளையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். கடைசியில், முஸ்லிம்களே வெற்றி பெற்ருர்கள்.

## உஹத் யுத்தம்

தோல்வி கண்ட குறைசியர் நம்பிக்கை இழக்க வில்லை. மறுபடியும், முஸ்லிம்களுடன் போர் புரிய விரும்பினுர்கள். ஆதலால் அடுத்த ஆண்டில் மூவா யிரம் வீரர்களுடன் மதீனு நோக்கிப் புறப்பட்டார் கள். அபூ சுபியான் என்பவர் குறைசியரின் படைக்குத் தலைவராயிருந்தார். இவர் நபி (ஸல்) அவர்களின் எதிரியாய் இருந்து வந்தார். மக்காவி லிருந்து பெருந்தொகையான பெண்களும், குறைசிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையுடன் சென்றூர்கள். போர் நடைபெற்றபோது அந்தப் பெண்கள். ஆண்களுக்கு ஊக்கமளித்தார் கள். போர் நடைபெற்ற இடத்தில் பின்னணியில் நின்று முரசு கொட்டி வீரர்களுக்கு தைரியம் கொடுத்தார்கள். பத்ர் யுத்தத்தில் கொல்லப்பட்ட வர்களுக்காக வஞ்சம் தீர்த்துக்கொள்வதே இவர் களின் நோக்கம். உஹத் மலைக்கருகில் இந்த யுத் தம் நடைபெற்றதனுல் இதனை உஹத் யுத்தம் என்று அழைக்கப்படுகின்றது. மிக மும்முரமாக நடந்த இந்த யுத்தத்தில், முஸ்லிம் வீரர்கள் தைரி யமாகப் போரிட்டார்கள். ஆனுல், அவர்களின் தொகை மிகக் குறைவானதாய் இருந்தது. குறை சியர் மூவாயிரம் பேருக்குப் பதில், முஸ்லிம்கள் எழுநூறு பேர் இருந்தார்கள். ஒரு கட்டத்தில், முஸ்லிம் வீரர், இந்த யுத்தத்தில் வெற்றி பெற்று விட்டதாக நினைத்து, நபி (ஸல்) வீரர்களை இருக் கும்படி சொல்லியிருந்த இடத்தை விட்டுச் சென்று விட்டார்கள். குறைசியரின் முகாமில் புகுந்து, அவர் களின் பொருட்களை எடுக்கத் தொடங்கி விட்டார் கள். பாதுகாக்கப்பட வேண்டிய இடத்தில் ஒரு வருமே இருக்கவில்லை. ஆதலால், இந்த இடத்தில் போய் நின்று முஸ்லிம்களை எதிரிகள் தாக்கினுர்கள். இதனுல், பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். குறைசியர் பக்கமாக நின்று போரிட்ட காலித் இப்னு வலீத் என்பவர், நபி பெருமான் கொல்லப் பட்டுவிட்டதாக வதந்தியைப் பரப்பினுர். இதனுல், முஸ்லிம்களில் பலர் தைரியம் இழந்துவிட்டார்கள். உண்மையில், நபி (ஸல்) கொல்லப்படவில்லை. அவர் களைக் காணுததால் முஸ்லிம்கள் வதந்தியை நம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுர்கள். பின்னர் நபி பெருமானைத் தேடினுர்கள். ஒரு குகையினுள், அவர்கள் மயக்கமாக இருந்ததை முதலில் அபூபக்கர் கண்டார். மற்றவர்களும் அந்த இடத்தைப் போய்ச் சேர்ந்து நபியை வெளியில் கூட்டி வந்தார்கள். மயக்கம் தெளிந்து, நபி பெருமான் குணமடைந்தார்கள். எதிரிகளை ஒழித்துவிடும் படி நபி (ஸல்) துஆ கேட்க வேண்டும் என்று முஸ்லிம் வீரர்கள் கேட்டுக் கொண்டதற்கு, "மனிதருக்கு நேர்வழி காட்டவே நான் வந்திருக்கிறேன்; அவர்களை ஒழித்து விடுவதற்கு அல்ல" என்று நபி பெருமான் பதில் கூறினுர்கள். குறைசியரை நேரான வழிக்கு திரும்பச் செய்யும்படி, நபி (ஸல்) துஆக் கேட்டார்கள். எதிரிகளுக்கும் அவர்கள் அன்பு காட்டியதை, இதிலிருந்து தெரிந்து கொள்ள முடியும். விரோதிகளுக்கு எதிராகவும் அவர்கள் துஆக் கேட்கக்கூட இல்லை.

நபி (ஸல்) சுகமாயிருப்பதைக் கண்ட முஸ்லிம் வீரர்களுக்கு தைரியம் வந்தது. மறுபடியும் எல்லா வீரர்களும் ஒன்று சேர்ந்து உறுதியோடு எதிரியை தாக்கினுர்கள். எதிரிகள் தோல்வியுற்றனர். இரண்டாவது முறையும் முஸ்லிம்களுக்கு பெரிய வெற்றி கிடைத்துவிட்டது. உஹத் யுத்தத்தின் பின்னரும் முஸ்லிம்கள் சில யுத்தங்களை நடத்தினுர்கள். அவற்றிலும் வெற்றி பெற்ருர்கள். முஸ்லிம்களின் வெற்றிகளை கண்ட ஏனையவர், இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். முஸ்லிம்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. நல்ல வலிமையான சமுதாயமாக முஸ்லிம்கள் மாறிக்கொண்டிருக்கும் சமயத்தில் கூட, நபி (ஸல்) அவர்கள் எதிரிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை மன்னித்தார்கள். நல்ல குணத்தின் சிகரமாக விளங்கிய நபி பெருமானின் வாழ்க்கை விபரங்களை அறிந்து, அவர்களின் உதாரணங்களை பின்பற்றுதல் முஸ்லிம்களின் கடமையாகும். முன்பு வதந்தி பரப்பிய மாபெரும் வீரரான காலித் இப்னு வலீத் கூட, பின்னர் இஸ்லாத்தில் சேர்ந்து, நபி (ஸல்) அவர்களுக்கு உறுதுணையாக இருந்து பல போர்களில் முஸ்லிம்கள் வெற்றி பெறுவதற்கு காரணமாயிருந்தார்.

## மற்றுமொரு வெற்றி

நபி (ஸல்) அவர்கள் பிறந்து வளர்ந்த மக்காவின் மக்கள் அவர்களை கொடுமைப்படுத்தியதால் அவர்கள் மதீனாவிற்குச் சென்றார்கள். அங்கும் அவர்களை நிம்மதியாக இருக்கவிடாமல் எதிரிகள் போர்களைத் தொடங்கினர். கொடுமையான போர்களினால், பல நல்ல பெரியார்கள் உயிரிழந்தார்கள். இந்த நிலைக்கு முடிவுகாண விரும்பிய நபி பெருமான், மக்காவாசிகள் மீது போர் தொடுக்க வேண்டுமென முடிவு செய்தார்கள். பெரிய படை திரட்டப்பட்டது. நபி பெருமானே படைக்குத் தலைமை தாங்கினார்கள். மக்கா நகருக்கு வெளியில், யுத்தம் ஆரம்பமானது. எதிரிகள் விட்டுக்கொடுக்கவில்லை. உற்சாகமாகப் போரிட்டார்கள். கடைசியில் எதிரிகள் தோல்வியடைந்தனர். மக்கா வாசிகளின் தலைவரான அபூசுப்யான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஆதலால், மக்காவினுள் யுத்தம் நடைபெறவில்லை. யுத்தமின்றியே தோழர்களோடு, பெருமானார் மக்காவினுள் சென்றார்கள்.

மக்காவை வெற்றி கொண்டதனால், நபி பெருமானின் புகழ் பல திசைகளிலும் தெரிய வந்தது.

—o—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு 10

அறுபத்திமூன்ருவது வயதில் நபி (ஸல்) அவர்கள் சுகவீனமாஞர்கள். தனக்கு இறைவன் கொடுத்த முக்கியமான வேலை பூர்த்தியாகி விட்டது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். உலகில் இருந்து பிரிவதற்கான நாள் நெருங்கி விட்டது என்பதையும் புரிந்து கொண்டார்கள். அல்லாஹ்வின் தூதை, உலக மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகவே தூதராகத் தெரிந்து எடுக்கப்பட்டவர். அறபு நாட்டு மக்களுக்கு அந்த தூதைத் தெரிவித்து விட்டார். அதன் பின்னர், அறபு நாட்டினர் உலக மக்களுக்கெல்லாம் தூதை அறிவிப்பார்கள் என்பதில் நபி (ஸல்) அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது.

ஹிஜ்ரி பதினேராம் ஆண்டில் ரபியுல் அவ்வல் மாதம் பன்னிரண்டாம் நாளன்று நபி (ஸல்) காலமாஞர்கள். தற்பொழுதுள்ள மேற்கத்திய திகதி முறைப்படி 632-ஆம் ஆண்டு ஜூன் மாதம் எட்டாம் திகதியே இந்நாளாகும். மதிஞவில் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

—o—

# போதனைகள் 11

அல்லாஹ் ஒருவன், அவனே எல்லா வல்லமையும் உள்ளவன், உலகையும், உலகிலுள்ள அனைத்தையும் அவனே படைத்தான். அவன் எங்கும் இருக்கிருன். எங்கள் செயல்களை எல்லாம் அவன் அறிவான். எங்களுக்கு உயிர் தந்த அவனே எங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கிறான். அவனையன்றி, உயிர் கொடுக்கும் வல்லமை வேறு எவருக்குமே இல்லை. அவனை யாரும் பெறவில்லை. தொடக்கம், முடிவு என்பன அவனுக்கு இல்லை. அல்லாஹ் இரக்கமுள்ளவன். எங்களுக்கு உணவு, உடை கிடைப்பதற்கு அவனே வழி செய்திருக்கிறான்.

முதலில், அல்லாஹ்வைப் பற்றித் தெரியாமல் இருந்ததால், அரேபிய மக்கள் சிலைகளை வணங்கினார்கள். எல்லா வல்லமையும் உடைய ஒரே இறைவன் இருக்கிறான் என்று நபி (ஸல்) அவர்களின் போதனைகளில் இருந்து தெரிந்து கொண்ட பின்னர், அரேபிய மக்கள் இஸ்லாத்தில் நம்பிக்கை கொண்டார்கள்.

## ஈமான் கொள்ளுதல்

அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்று உறுதியான நம்பிக்கை வைப்பதை ஈமான் கொள்ளுதல் என்று சொல்லப்படுவதுண்டு. அல்லாஹ்விலும், அவனுடைய மலக்குகள் உண்டு என்பதிலும் இஸ்லாத்திற்கு முன்னர் அவன் உலக மக்களுக்கு அனுப்பிய ஏனைய வேதங்களிலும் அந்த வேதங்களை உலக மக்களுக்கு எடுத்துக் கூறிய நபிமார்களிலும், மனிதனின் செயல்கள் பற்றி விசாரணை செய்யப்படும் இறுதிநாள் உண்டு என்பதிலும், முஸ்லிம்கள் நம்பிக்கை வைத்தல் வேண்டும். விதியின்படி நன்மையும் தீமையும் அல்லாஹ்விஞல் உண்டாகின்றன என்றும், மரணத்திற்குப் பின்னர் உயிர்பெற்று எழுதல் உண்டு என்றும் நம்புதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்து நேரத் தொழுகை

நம்பிக்கையை செயலில் காட்டுவதற்காக ஒவ்வொரு நாளும் ஐந்துநேரம் அல்லாஹ்வை வணங்க வேண்டும். எங்களுக்கு உயிர் தந்து, உணவு கிடைக்க வழி செய்து, உயர் நிலையில் எம்மை வைத்துள்ள இறைவனை தினமும் நினைவு படுத்துதல் அவசியம் அல்லவா? அத்துடன், அவன் தந்துள்ள நல்லவைகளுக்கு நன்றி தெரிவித்தல் அதைவிடவும் அவசியம். ஆதலால்தான், தினமும் ஐந்து நேர தொழுகையில் எல்லா முஸ்லிம்களும் ஈடுபடுதல் வேண்டும் என்று ஏற்பாடாகியுள்ளது.

## நோன்பு வைத்தல்

இஸ்லாமிய ஆண்டில் உள்ள பன்னிரண்டு மாதங்களில், ஒன்பதாவது மாதமாகிய ரமழான் முப்பது நாளும் நோன்பு இருத்தல் நம்பிக்கையைச் செயலில் காட்டுகின்ற மற்றுமொரு அனுஷ்டானமாகும். நோன்பு வைப்பதால் பல நன்மைகள் உண்டு. ஏனைய சமயங்களிலும் நோன்பு வைப்பதில் உள்ள நன்மை பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது.

## ஸகாத் கொடுத்தல்

பணவசதி இருப்பவர்கள், வருடத்தில் ஒரு தடவை தம்மிடமுள்ள பொருளில் இரண்டரைச் சதவீதத்தைக் கணக்குப் பார்த்து, ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதை ஸக்காத் என்று சொல்லப்படுகிறது. இதுவும், இஸ்லாத்தில் ஒரு முக்கிய கடமை. தவறாமல் இந்தக் கடமையைச் செய்து வருவதால், மிகப்பெரிய நன்மைகள் உண்டாவதற்கு வழி ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹஜ்ஜு செய்தல்

பணவசதி இருப்பவர்கள், வழிப்பயணத்திற்கு உடலில் சக்தியும் பெற்றிருந்தால், வாழ்க்கையில் ஒரு முறையாவது மக்காவில் உள்ள கஃபாவிற்குச் சென்று வருதல் வேண்டும். இந்தப் பயணத்தை ஹஜ்ஜு செய்தல் என்று சொல்லப்படுகிறது.

## சகோதரத்துவம்

இஸ்லாம் மதத்தில் அன்பு. சகோதரத்துவம் ஆகிய இரண்டும் வலியுறுத்தப்படுகிறது. எனவே, முஸ்லிம்கள் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் அன்பாக, சகோதரர் போன்று வாழுதல் வேண்டும். முஸ்லிம்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் வேண்டும். நபி பெருமானின் போதனைகளில் மிக முக்கியமான அம்சங்கள் இவை தான். இவற்றைத் தெரிந்து இந்த நல்ல போதனைகளின்படி நடந்தால்தான் ஒருவர் நல்ல முஸ்லிம் என்று இருக்கலாம்.

மக்காவின் மீது படையெடுத்து வெற்றிபெற்ற பின்னர் நபி (ஸல்) அவர்கள் கஃபாவிற்குச் சென்றார்கள். அங்கே 360 சிலைகள் இருந்தன. அவற்றையெல்லாம் எடுத்து உடைத்து விட்டார்கள். அதன் பின்னர் கஃபா பரிசுத்தமான இடமாக அமைந்தது. சிலைகளை வைத்து வணங்குவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. முஸ்லிம்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்குதல் வேண்டும். அவன் படைத்த பொருட்களை வணங்குதல் ஆகாது என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சூழலின் தாக்கம்

இஸ்லாமிய நாடுகளில் வாழ்பவர்கள் இஸ்லாமிய சூழலிலேயே இருப்பார்கள். ஆனால், இலங்கை போன்ற ஏனைய மதத்தவர் பெரும்பான்மை மக்களாக வாழும் நாடுகளில், சூழல் சிறப்பாயிராது. ஆதலால், இஸ்லாமிய நாடுகளின் முஸ்லிம்களை விடவும், சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழுகின்ற ஊர்களில் இருப்பவர்கள், இஸ்லாமிய பழக்க வழக்கங்களை நன்றாகத் தெரிந்து கொள்வதில் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

ஏனைய மதத்தவர்கள் அல்லாஹ்வைப் பற்றி நினைக்கமாட்டார்கள். அவர்களின் பழக்கவழக்கங்கள், சில சமயங்களில் முற்றிலும் மாறானவையாக இருக்கலாம். எனவே, அவர்கள் செய்யும் தவறான செயல்களை நாமும் செய்தல் ஆகாது. சரியான செயலைத் தெரிந்து அதன்படி நாம் நடத்தல் வேண்டும். கல்வி கற்ற பெரியோர்களிடம், எது சரி, எது தவறு என்று கேட்டு அறிந்து கொள்ளுதல் மிக மிக அவசியமாகும்.

—o—

## நற்குணம் 12

இஸ்லாம் என்ற சொல்லின் கருத்து சாந்தி, சமாதானம் என்பதாகும். இஸ்லாமிய முறைப்படி நடப்பவர்கள் உலகில் சமாதானமாய் வாழலாம். இந்த உலகிலும், மறு உலகிலும் சாந்தி பெறுவதற்கு ஒரே சிறந்த வழி, இஸ்லாமிய முறையில் நடப்பது தான். "மனிதனுக்கு விமோசனம் அவனின் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்தான்'' என்று நபி (ஸல்) சொல்லியிருக்கிறார்கள். உலகில் சமாதானமாக, நல்ல அன்புள்ளவர்களாக வாழ்ந்து நன்மையே செய்தவர்கள், மறு உலகில் சுவர்க்கத்தில் ஆனந்தமான வாழ்வைப் பெறுவார்கள். தீமை செய்தவர்கள், பல வகையான கொடுமைகள் நிறைந்த நரக வாழ்வைப் பெறுவார்கள்.

மனிதர்கள் மற்றைய மனிதருக்கு அன்பு காட்டுதல் வேண்டும். தம்மால் இயன்ற அளவு மற்றவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். யாருக்கும் என்ன தீங்கும் செய்தல் கூடாது. மக்கா மீது வெற்றி பெற்ற நபி (ஸல்) மக்காவாசிகளையெல்லாம் கொடுமைப்படுத்தியிருக்கலாம். நபி பெருமானுக்கு எதிரிகள் செய்த பல தீங்குகளுக்கு, ஆசை தீரும்வரை பழிவாங்கியிருக்கலாம். ஆனால், நபி பெருமான் அவர்கள் மீது அன்பு காட்டினார்கள். அவர்கள் செய்த தவறுகளை மன்னித்தார்கள். எதிரிகளின் பொருட்களை தனது வீரர்கள் களவு எடுக்கவோ எதிரிகளை வென்ற பின்னர் கொலை செய்யவோ, பெருமானார் அனுமதிக்கவில்லை. வெற்றி கண்ட வீரர்கள் தம்மைக் கொன்று விடுவார்கள் என்ற பயத்தால் குறைசியர் நபிபெருமானிடம் சென்றார்கள். ''நீங்கள் எனக்கு பல தீங்குகளைச் செய்திருக்கிறீர்கள். என்னிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கமுடியும்?'' என்று அவர்களிடம் நபி (ஸல்) கேட்டார்.

''அன்பையே எதிர்பார்க்கிறோம்'' என்று பதில் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி, எனது அன்பு உங்களுக்கு உண்டு. நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள். உங்களுக்கு விடுதலை அளிக்கிறேன்'' என்று நபி (ஸல்) சொன்னார்கள். யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் தோல்வியடைந்தவர்களுக்கு அன்பு காட்டுவதில்லை, ஆனால் நபி (ஸல்) அவர்களின் தாராளமான குணம் எல்லை இல்லாததாய் இருந்தது.

மிகவும் சாதாரண மனிதர் போலவே நபி (ஸல்) நடந்து கொண்டார்கள். மிகவும் சாதாரணமான முறையில் உடை தரித்தார்கள். தனது உடைகளில் அல்லது சப்பாத்துக்களில் தைக்கும்படி அவசியம் ஏற்பட்டால், தானே அதைச் செய்து கொள்வார்கள். மிகவும் சாதாரண உணவுதான் சாப்பிட்டார்கள். பேரீச்சம்பழம், ஒட்டகைப்பால் ஆகியவற்றை விரும்பிச் சாப்பிட்டார்கள். சிறுவர், அனாதைகள் மீது நபி (ஸல்) இரக்கம் காட்டினார்கள். எப்பொழுதும் ஒரு சிறுவனையோ, சிறுமியையோ அல்லது அனாதைப் பிள்ளையையோ கண்டால் அன்பாகப் பேசத் தவற மாட்டார்கள். ஒருமுறை, தனது மனைவியான ஆயிஷாவிடம் ''ஏழைகளுடன் அன்பாய் நடந்து கொள்ளுதல் வேண்டும். அவர்களுக்கு அன்பு காட்டினால், இறைவன் உங்களுக்கு நல்ல அன்பையே காட்டுவான்'' என்று சொன்னார்கள். எல்லா மனிதர்களிடத்தும் அவர்கள் அன்பாகவே நடந்து கொண்டார்கள்.

மிருகங்கள், பறவைகளுக்குக்கூட, நபி (ஸல்) அன்பு காட்டினார்கள். அவைகளுக்குத் தீங்கு செய்தல் வேண்டாமென்று நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாளும் அவர்கள் பொய் சொல்லியதே இல்லை. யாரைப் பற்றியும் கெடுதலாக பேசவும் மாட்டார்கள். எதிரிகளைக்கூட, அவர்கள் சபித்த தில்லை. ஒரு நாள் மரமொன்றின் நிழலில், நபி பெருமானார் நித்திரை செய்தார்கள். எதிரி ஒருவர் அவர்களை எழுப்பி, வாளைக்காட்டி, "இப்பொழுது, உங்களை என்னிடமிருந்து யார் காப்பாற்ற முடியும்?" என்று கேட்டார். "இறைவன் என்னைக் காப்பாற்று வான்" என்று அமைதியாக நபி (ஸல்) பதிலளித் தார்கள். அப்பொழுது எதிரியின் நெஞ்சில் ஒரு பயம் உண்டாகியது அவர் நடுநடுங்கினார். கையில் இருந்த வாள், கீழே விழுந்தது. நபி (ஸல்) வாளைக் கையில் எடுத்துக் கொண்டு, "உம்மை யாரால் காப்பாற்ற முடியும்?" என்று கேட்டார்கள். "யாருமே இல்லை" என்று எதிரி பதில் அளித்தார். "அப்படியானால் அன்பாய் நடப்பதற்கு என்னிட மிருந்து படித்துக்கொள்ளும்" என்று கூறியபடியே நபி (ஸல்) வாளை அந்த எதிரியிடமே திருப்பிக் கொடுத்தார்கள். இதிலிருந்து நபி (ஸல்) இறை வனின் உண்மைத்தூதர் என்பதைத் தெரிந்து கொண்ட எதிரி, இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டார்.

மனிதர் நல்லவர்களாகவே இருத்தல் வேண்டு மென்று இஸ்லாம் கூறுகிறது. எவருக்கும் தீங்கு செய்ய வேண்டாம். மற்றவர் பொருளைக் களவு செய்தல் கூடாது. பொய் சொல்லுதல் ஆகாது. ஒருபொழுதும், மனதில் கெட்ட எண்ணங்களை வைத்தல் கூடவே கூடாது. ஏழைகளுக்கும், வலிமை இல்லாதவர்களுக்கும் விசேஷமாக அன்பு காட்டுதல் வேண்டும். இப்படித்தான், இஸ்லாம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் காட்டப்படலாகாது. பணம் உள்ளவர்கள் ஏழைகளுக்குக் கொடுத்து உதவுதல் வேண்டும். ஏனெனில், எல்லா முஸ்லிம்களும் சகோதரர்களே. ஒருவருக்கொருவர் அன்புகாட்டி, கூடிய விதங்களில் எல்லாம் உதவி செய்தல் மிக முக்கியமான கடமையாகும்.

இறைவனால் உலக மக்களுக்கு நல்ல செய்திகளை எடுத்துச் சொல்லும்படி அனுப்பப்பட்ட தூதர்களில் முஹம்மத் நபி (ஸல்) அவர்களே கடைசித் தூதர், அவர்களேதான் மிகச் சிறந்த வழிகளை மனிதருக்குக் காட்டியுள்ளார்கள்.

—o—

## நல்ல பழக்கங்கள் 13

அதிகாலையில் எழுந்து, ஒவ்வொரு நாளும் சுப்ஹு தொழுதுவிட்டு, காலைக் கடமைகளைச் செய்தல் மிக நல்ல பழக்கமாகும். பின்னர் நண்பகலில் ளுஹர், மாலை நாலுமணி அளவில் அஸர், சூரியன் மறைந்து சிறிது நேரத்தில் மஃரிப், அதிலிருந்து ஒரு மணி இருபது நிமிடம் கழிந்த பின்னர் இஷா ஆகிய தொழுகைகளைத் தவறவிடாமல் தொழுது வந்தால் கிடைக்கும் நன்மைகள் ஒன்றல்ல, இரண்டல்ல—பல்லாயிரம், தவறுமல் தொழுபவருக்குப் பெரிய நோய்கள் எதுவும் வருவதில்லை. எல்லாவிதமான தீங்குகளில் இருந்தும் அவருக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது. தன்னை அறியாமலே, ஏதேதோ வழிகளில் நன்மைகள் ஏற்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும், இரவில் குர்ஆனின் ஒரு சிறு பகுதியையாவது ஓதுவதால் ஏற்படுகின்ற நன்மைகள் பல. சிறுவயதிலிருந்தே, தவறாமல் தினமும் குர்ஆன் ஓதிவருவதற்குப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். குர்ஆன் ஓதத் தெரியாதவர்களுக்கு, ஓதும் விதத்தைச் சொல்லிக் கொடுத்தல் மிக நல்லதாகும்.

எப்பொழுதும், நல்ல காரியங்களைத் தொடங்கும் பொழுது பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம் (அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்) என்று சொல்லித் தொடங்குதல் வேண்டும். புத்தகம் படிக்கத் தொடங்கும் போதும், வீட்டில் இருந்து வெளியில் செல்லத் தொடங்கும் போதும், திரும்பி வந்து வீட்டினுள் செல்லும் போதும், பிஸ்மி சொல்வதால் மிகப் பல நன்மைகள் உள்ளன. நல்ல காரியங்களைச் செய்யும் பொழுது கஃபாவின் திசை நோக்கிச் செய்தல் மற்றுமொரு நல்ல பழக்கமாகும். சாப்பிடுதல், நித்திரை செய்தல், படித்தல், தொழுகைக்கு வுளு எடுத்தல் போன்றவைகளை முடியுமான வரையில், கஃபாவின் திசை நோக்கி செய்தல் நல்லது. எதையும் செய்யத் தொடங்கும்போது வலது கையால் தொடங்குதல் வேண்டும். உடை அணியும் போதும் சப்பாத்து அணியும்போதும் முதலில் வலது பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும். வீட்டில் இருந்து வெளியேறும் போதும் முதலில் வலது காலைத்தான் வெளியில் எடுத்து வைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்துதான், சாப்பிடவும் குடிக்கவும் வேண்டும். ஏனெனில், மிருகங்கள் நின்று கொண்டு தான் உண்ணுகின்றன; குடிக்கின்றன. மனிதன் தன்னை மிருகத்தின் நிலைக்குத் தாழ்த்திக்கொள்ள லாகாது.

எங்களுக்கு ஒருவர் அன்பளிப்பு ஒன்றைத் தந்தால் அல்லது நல்ல செய்தி ஒன்றைக் கேள்விப் பட்டால், உடனே அல்ஹம்து லில்லாஹ் (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்று நன்மை கிடைத் தமைக்காக அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லுதல் வேண்டும்.

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைச் சந்திக்கும் பொழுது அஸ்ஸலாமு அலைக்கும் (அல்லாஹ்வின் சாந்தி உங்கள் மீது உண்டாவதாக) என்று ஸலாம் சொல்லுதல் மிக நல்ல பழக்கமாகும். இதுபோன்று, மேலும் நல்லவற்றை பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இப்படியான பழக் கங்கள் சிறு வயதில் இருந்தே வருமானால், ஒருவர் தவறான வழிகளில் செல்லாமல் தன்னைப் பாதுகாத் துக்கொள்ள முடியும்.

—o—

## விளக்கம் 14

அல்லாஹ்வின் தனித்துவத்தை உறுதிப்படுத்துவ தற்காகத்தான் 'அவன்' என்று குறிப்பிடப்படுகிறது. 'அவர்' என்றால் பன்மையைக் காட்டலாம் என்னும் காரணத்தால், தமிழில் முன்னையோர் 'அவன்' என்றே குறிப்பிட்டுள்ளார்கள். குல்ஹுவல்லாஹு அஹத் என்பதில் அல்லாஹ் ஒருவன் என்று, குர் ஆன் கூறியுள்ளதும் ஆதலால், பன்மையைக் காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக் கூடிய சொற்களை பயன்படுத்துதல் சரியல்ல. அல்லாஹ் தனித்தவன்-இணைதுணை, பெற்ரோர், பிள்ளைகள், மனைவிமார் யாருமே அவனுக்கு இல்லை. படைக்கப்பட்டவர்களுக்குத்தான் இவைகளெல்லாம் உண்டு. படைக்கின்ற மகா பெரும் வல்லமையுள்ளவனுக்கு, இவை ஒன்றும் தேவையில்லை.

நபி பெருமானின் பெயருக்குப் பின்னால் ஸலவாத் சொல்லுதல் வேண்டும். ஸலவாத் என்றால் அல்லாஹ்வின் கருணைகள் என்பது கருத்து. முஹம்மத் என்று சொல்லக் கேட்டால், உடனே ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்று ஸலவாத் சொல்லுதல் வேண்டும். இதன் கருத்து, அல்லாஹ் அவர்கள்மீது கருணையும் சாந்தியும் பொழிவானாக என்பதாகும். மலக்குகள், முன்னைய நபிகளின் பெயர்கள் சொல்லக் கேட்டால், அலைஹிஸ்ஸலாம் என்று கூறுதல் வேண்டும். இதன் கருத்து, அவர்கள்மீது சாந்தி உண்டாவதாக என்பதாகும். நபி பெருமானின் நண்பர்கள், இனத்தவர், ஏனைய மார்க்கப் பெரியார்களின் பெயர்கள் குறிப்பிடப்படும் பொழுது, ரலியல்லாஹு அன்ஹு என்று, சொல்லுதல் வேண்டும். இதன் கருத்து, அவர்களைப் பற்றி அல்லாஹ் திருப்திகொள்வானாக என்பதாகும். பெரியோர்களுக்கு மரியாதை காட்டும் விதத்தில், இப்படியான அடைமொழிகள் கூறப்படுகின்றன. சமயத்திற்கு அரும்பணி புரிந்த மேதைகளை நாம் கண்ணியப்படுத்துதல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FEDERATION OF ASSEMBLIES OF MUSLIM YOUTH
FAMYS
27/1, Fairfield Gardens
Borella, Colombo 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பர்கள்

ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர், எங்கள் நபி பெருமான் (ஸல்) அவர்களின் அன்பு மகளான பாத்திமா (ரலி) அவர்களைத் திருமணம் செய்திருந்த அலி (ரலி) அவர்கள் சொன்னார்கள்: அறிவைத் தேடிக்கொள்ளாமல் மத பக்தியில் மட்டும் ஆழ்ந்திருப்பவர், செக்கு மாடு போலாவர். ஆகவே, அறிவு எத்துணை முக்கியமானது என்று எமக்கு விளங்குகிறது. அறிவு பெருக நல்ல புத்தகங்களை நிறைய வாசிக்க வேண்டும். ஒரு முறை வாசித்தால் போதாது. பல முறைகள் வாசிக்க வேண்டும். அதனால்தான்

## நல்ல நூல்கள், நல்ல நண்பர்கள்

என்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

நல்ல நூல்களைப் பெறுவதற்கு

நல்லதோர் இடம்:


## இஸ்லாமிக் புக் டிரஸ்ட்

*(மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ. தேசியக் கவுன்சில் கட்டடம்)*

*323, ஜும்ஆ மஸ்ஜித் ரோட்*

*கொழும்பு - 10*


ரூபா. 5/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org